# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 06 | சைவநெறி<br>சுட்டெண் : ................................................................. | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

- **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1. "பிரணவப் பொருளாம் பெருந்தகை..." என வெற்றி வேற்கை எனும் நூலில் போற்றப்படும் தெய்வம்
   1) வைரவர்   2) முருகப்பெருமான்   3) விநாயகர்   4) திருமால்

2. "அரிது அரிது மானுடராதல் அரிது..." எனக் கூறியவர்
   1) திருவள்ளுவர்   2) ஔவையார்   3) திருமூலர்   4) ஆறுமுகநாவலர்

3. எல்லா மதங்களும் ஒற்றுமையுடன் ஒரே குரலில் அழுத்திச் சொல்லும் முக்கியமான விடயம்
   1) தருமம்   2) சத்தியம்
   3) பெரியோரை மதித்தல்   4) அன்பு

4. கர்ண வேதனம் என அழைக்கப்படும் வாழ்வியல் சடங்கு
   1) ஏடு தொடக்குதல்   2) சோறூட்டல்   3) பெயர் சூட்டல்   4) காது குத்துதல்

5. சிவ அன்பராக இளையான் குடிமாறனார் இல்லத்திற்குச் சென்றவர்
   1) சிவபெருமான்   2) ஔவையார்   3) பார்வதிதேவி   4) விஷ்ணு

6. இறைவனைப் பித்தன் என ஏசிய நாயனார்
   1) திருஞானசம்பந்தர்   2) திருநாவுக்கரசர்
   3) மாணிக்கவாசகர்   4) சுந்தரமூர்த்தி நாயனார்

7. பசுவதைக்கு அஞ்சித் தமிழகம் சென்றவர்
   1) ஞானப்பிரகாச முனிவர்   2) ஆறுமுகநாவலர்
   3) விபுலானந்தர்   4) சின்னத்தம்பிப் புலவர்

8. தட்சிணகைலாயம் எனப் போற்றப்படும் தலம்
   1) திருக்கேதீச்சரம்   2) திருக்கோணேச்சரம்
   3) முன்னேச்சரம்   4) நகுலேச்சரம்

9. இஸ்லாம் சமயத்தவரின் முதன்மை நூல்
   1) திரிபீடகம்   2) வேதம்   3) திருக்குர்ஆன்   4) வேதாகமம்

10. பஞ்சபுராணம் ஓதும்போது நான்காவதாக இடம்பெறுவது
   1) தேவாரம்   2) திருவிசைப்பா   3) திருப்புராணம்   4) திருப்பல்லாண்டு

11. திருத்தாண்டகம் இடம்பெறும் திருமுறை
   1) ஐந்தாம் திருமுறை   2) ஆறாம் திருமுறை
   3) நான்காம் திருமுறை   4) ஒன்பதாம் திருமுறை

12. நாட்டார் வழிபாட்டின் வேறுபெயர்களில் ஒன்று
   1) சிறுதெய்வ வழிபாடு   2) தரிசன வழிபாடு
   3) ஆகம வழிபாடு   4) ஆலய வழிபாடு

13. "சூரியன் வருவது யாராலே தூமதி தாழ்வது யாராலே..." எனும் பாடலைப் பாடியவர்
1) செல்லப்பா சுவாமிகள்
2) யோகர் சுவாமிகள்
3) ஆறுமுகநாவலர்
4) கடையிற் சுவாமிகள்

14. தேவாரப் பாடல்கள் கண்டெடுக்கப்பட்ட திருத்தலம்
1) தில்லை 2) திருவையாறு 3) திருவாரூர் 4) திருவண்ணாமலை

15. சிவாலய தரிசன பலனைத் தருபவர்
1) நடராஜர் 2) சோமஸ்கந்தர் 3) இலங்கோற்பவர் 4) சண்டேஸ்வரர்

16. திருஞானசம்பந்தர் முத்தியடைந்த தினம்
1) ஆனிமகம் 2) வைகாசி மூலம் 3) சித்திரைச் சதயம் 4) ஆடிச்சுவாதி

17. இராவணன் வெட்டுக் காணப்படும் ஆலயம்
1) நகுலேச்சரம்
2) திருக்கோணேச்சரம்
3) சீதையம்மன் ஆலயம்
4) திருக்கேதீச்சரம்

18. சீதாதேவியை இராவணன் சிறைவைத்த இடம்
1) நந்தவனம் 2) சிங்கராஜவனம் 3) அசோகவனம் 4) எழில்வனம்

19. வைகாசிப் பௌர்ணமிக்கு முதல் வரும் திங்கட்கிழமை பொங்கல் விழா நடைபெறும் ஆலயம்
1) திருகோணமலை பத்திரகாளி கோயில்
2) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
3) திருக்கோணேச்சரம்
4) பறாளை ஈஸ்வர விநாயகர் கோயில்

20. ஆலய வழிபாட்டினால் நாம் பெறும் பயன்களில் ஒன்று
1) வாழ்வு வளம் பெறும்
2) நண்பர்களைச் சந்தித்தல்
3) பொழுது போக்கு
4) உறவினர்களைச் சந்தித்தல்

(20×2=40 புள்ளிகள்)

## பகுதி - II

- **1ம் வினா உட்பட ஏனைய வினாக்களில் விரும்பிய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர் பெயர், தலம் என்பவற்றைத் தருக.
I. "பூசுவதும் வெண்ணீறு..."
II. "இடரினுந் தளரினும்..."
III. "சீரும் திருவும் பொலியச்..."
IV. "ஒளிவளர் விளக்கே..."

(6+1+1×2=16 புள்ளிகள்)

02) "விழுமியங்களைப் பேணி வாழ்வில் உயர்வோம்"
1. நீங்கள் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சமூகம் சார்ந்த விழுமியப் பண்புகள் மூன்று தருக.
2. "ஒழுக்கம் விழுப்பம் தரலான்..." எனக் கூறியவர் யார்? கூறிய நூல் எது?
3. பெரியோர் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
நாம் கனம் பண்ணவேண்டியவர்களில் முதன்மையானவர் யார்?
4. தர்புத்திரர் போரில் வெற்றி பெறச் செய்த யாகம் எது?

(2+2+3+4=11 புள்ளிகள்)

03) "ஒரு சைவ இல்லம் புனிதமும் பண்பும் நிறைந்த இடமாகும்"
1. சைவ சமயத்தவர்கள் அன்றாடம் வீடுகளில் கடைப்பிடிக்கவேண்டிய பழக்க வழக்கங்கள் நான்கு தருக.
2. விளக்கேற்றுவதற்கு உகந்த எண்ணெய்கள் மூன்று தருக.
3. பஞ்சபுராணங்கள் ஓதும் ஒழுங்குமுறையைத் தருக.
4. சிவசின்னங்கள் எவை? நீர் விபூதி தரிக்கும் முறையை எழுதுக.

(2+2+3+4=11 புள்ளிகள்)

04) "ஆலயம் தொழுவது சாலவும் நன்று..."

1. ஆலயம் என்பதன் பொருள் யாது?
2. தூல லிங்கம் எனக் குறிப்பிடப்படுவது யாது?
3. ஆலய வழிபாட்டினால் ஏற்படும் பயன்கள் மூன்று தருக.
4. ஆலயத்தில் ஆண்கள், பெண்கள் செய்யும் நமஸ்காரங்கள் எவை? எத்தினத்தில் நமஸ்காரம் செய்வீர்?

(2+2+3+4=11 புள்ளிகள்)

05) "சைவசமயம் முப்பொருள் பற்றிய உண்மையைப் பேசுகின்றது."

1. முப்பொருள்களும் எவை?
2. ஆன்மாவின் இறுதி இலட்சியம் எது?
3. பாசம் உயிரை மாசுபடுத்துவதால் அதற்கு வழங்கப்படும் பெயர்?
4. பதியின் இலக்கணங்கள் எவை?

(3+2+3+4=11 புள்ளிகள்)

06) "சைவசமய குரவர்கள் சைவசமயமே மெய்ச்சமயம் என்று நிலை நிறுத்தியவர்கள்."

1. சமயகுரவர்கள் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
2. திருநாவுக்கரசு நாயனார் பிள்ளைத்திருநாமம் யாது? அவரின் சகோதரியின் பெயர் யாது?
3. மாணிக்கவாசகர் அருளிய பதிகங்கள் எவை?
4. திருஞானசம்பந்தரின் மறுபெயர்கள் இரண்டு தருக. அற்புதங்கள் இரண்டு தருக.

(2+2+3+4=11 புள்ளிகள்)

07) "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்."

1. திருக்கோணேச்சர இறைவன் இறைவி பெயர்களை எழுதுக.
2. கண்டகி தீர்த்தம் அமைந்துள்ள ஆலயம் எது? அதன் பெயர் அமைந்ததற்குரிய காரணம் யாது?
3. சீதையம்மன் ஆலயம் அமைந்துள்ள இடம் எது? அதன் சிறப்புக்கள் இரண்டு தருக.
4. "பறாளை விநாயகர் பள்ளு" என்னும் நூலைப் பாடியவர் யார்? இதன்மூலம் குறிப்பிடப்படும் ஆலயத்தின் சிறப்புக்கள் இரண்டு தருக.

(2+2+3+4=11 புள்ளிகள்)

இந்துக் கல்லூரி
நூலகம்
யாழ்ப்பாணம்.